வெங்கட்டாராணி நீர்த்தேக்கத் திட்டம்

*4452 திரு. எம். சீரங்கன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஒன்றியத்தில் சித்தரப்பட்டி புதூரில் வெங்கட்டராணி நீர்த்தேக்கத் திட்டம் நிறைவேற்றப்படுமா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம் சித்தரப் பட்டி புதூரில் வெங்கட்டராணி நீர்த் தேக்கத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் வெங்கட்டராணித் திட்டம் என்ற ஒன்று முன்னால் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இருந்த காலத்திலே 1973-ல் ஆய்வு செய்யப்பட்டது. அதன் பிறகு 1980 ஆம் ஆண்டு ஆய்வு செய்யப்பட்ட அறிக்கையும் அரசுக்கு அனுப்பப்பட்டது. பரிசீலனை ஏன் நின்றிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்திலே சித்திரப்பட்டி கிராமம் அங்கே வெங்கட்டராணி நீர்த் தேக்கத்தை கட்டினால் கண்ணாமூச்சி வரை செல்லும்சாலை பழுதடைந்து விடும் பாதகம் ஏற்படும். அது அஃதன்னியில் மாற்றுத் திட்டமாக வேறொரு புதியத் திட்டத்தை அந்த வெங்கட்டராணீ நீர்த்தேக்க ஸ்தலத்திருந்து ஒரு கிலோ மீட்டர் பின்னோக்கி அமைப்பதற்கான அந்த ஆய்வுதான் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, வெங்கட்டராணி அல்ல.

10–00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினா நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. எம். சீரங்கன் : தலைவர் அவர்களே, வெங்கட்ட ராணி நீர்த்தேக்கத் திட்டத்தை அரசு பரிசீலனை செய்து, பிறகு நிறுத்தியதற்குக் காரணம், அங்கே சிலருடைய சுயநலம் காரணமாக வேறு வழியில் திருப்பி விடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் 300 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். 6 கி.மீ. அளவிற்கு அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளுடைய கிணறுகளுக்கு தண்ணீர் ஊற்று கிடைக்கும். எனவே, மீண்டும் அரசு இதை பரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, பரி சீலனை ஆரம்ப நிலையில் இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையை கருத்தில் கொண்டு மீண்டும் அரசு அதை ஆராயும்.

சத்துணவுக் கூடங்களில் ஆயாக்களுக்கு சீருடை

*3357 திரு. யூ. கே. வெள்ளிங்கிரி :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்துணவுக் கூடங்களில் வேலை செய்யும் ஆயாக்களுக்கு சீருடை கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : தலைவர் அவர்களே, அவர்கள் அந்த சத்துணவுக் கூடங்களில் பல காலமாக பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு சீருடை இனிமேலாவது வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; தலைவர் அவர்களே, இனிமேலும் சீருடை வழங்கும் திட்டம அரசின் பரி சீலனையில் இல்லை.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி ; மாண்புமிகு தலைவர் அவர் களே, சத்துணவுக் கூடங்கள் பல இடங்களில் பழுதுபட்டுள்ளன. (மணியடிக்கப்பெற்றது).